# ஆகஸ்ட்– 23– வியாழன்

## புனித லீமா ரோசா

**“அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்.” (மத்தேயு22:14)**

### முதல் வாசகம் : ஏசேக்கியல்36 : 23 – 28

நீங்கள் வேற்றினத்தாரிடையே தீட்டுப்படுத்திய என் மாபெரும் பெயரை நான் புனிதப்படுத்துவேன். அப்போது உங்கள் வழியாய் அவர்கள் கண்முன்னே என் தூய்மையை நிலைநாட்டும்போது நானே ஆண்டவர் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள் என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.நான் உங்களை வேற்றினத்தாரிடமிருந்து அழைத்து, பல நாடுகளிடையே கூட்டிச் சேர்த்து, உங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பக் கொணர்வேன். நான் தூய நீரை உங்கள்மேல் தெளிப்பேன். நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் துய்மையாவீர்கள் உங்கள் எல்லாச் சிலைவழிபாட்டுத் தீட்டையும் அகற்றுவேன்.நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலிலிருந்து கல்லாலான இதயத்தை எடுத்துவிட்டு, சதையாலான இதயத்தைப் பொருத்துவேன்.என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். என் நியமங்களைப் கடைப்பிடிக்கவும் என் நீதிநெறிகளைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வேன்.நான் உங்கள் முன்னோருக்குக் கொடுத்த நாட்டில் நீங்கள் வாழ்வீர்கள். அப்போது என் மக்களாய் இருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்.

**பதில்பாடல் :** தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன். நீங்கள்
அனைவரும் தூய்மையாவீர்கள்.

### நற்செய்தி : மத்தேயு 22 : 1 – 14

அக்காலத்தில் இயேசு மீண்டும் உவமைகள் வாயிலாகப் பேசியது. ”விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் அரசர் ஒருவர் தம்மகனுக்குத் திருமணம் நடத்தினார்.திருமணத்திற்கு அழைப்புப் பெற்றவர்களைக் கூட்டிக்கொண்டுவருமாறு அவர் தம் பணியாளர்களை அனுப்பினார். அவர்களோ வரவிரும்பவில்லை. மீண்டும் அவர் வேறுபணியாளர்களிடம், ”நான் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். காளைகளையும் கொழுத்த கன்றுகளையும் அடித்துச் சமையல் எல்லாம் தயாராயுள்ளது. திருமணத்திற்கு வாருங்கள்” என அழைப்புப் பெற்றவர்களுக்குக் கூறுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.அழைப்புப்பெற்றவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. ஒருவர் தம்வயலுக்குச் சென்றார் வேறு ஒருவர் தம்கடைக்குச் சென்றார்.மற்றவர்களோ அவருடைய பணியாளர்களைப் பிடித்து இழிவுபடுத்திக் கொலைசெய்தார்கள். அப்பொழுது அரசர் சினமுற்றுத் தம்படையை அனுப்பி அக்கொலையாளிகளைக் கொன்றொழித்தார். அவர்களுடைய நகரத்தையும் தீக்கிரையாக்கினார்.பின்னர் தம் பணியாளர்களிடம், ”திருமண விருந்து ஏற்பாடாகி உள்ளது. அழைக்கப் பெற்றவர்களோ தகுதியற்றுப் போனார்கள்.எனவே நீங்கள் போய்ச் சாலையோரங்களில் காணும் எல்லாரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள்” என்றார்.அந்தப் பணியாளர்கள் வெளியே சென்று வழியில் கண்ட நல்லோர், தீயோர் யாவரையும் கூட்டி வந்தனர். திருமண மண்டபம் விருந்தினரால் நிரம்பியது. அரசர் விருந்தினரைப் பார்க்க வந்தபோது அங்கே திருமண ஆடை அணியாத ஒருவனைக் கண்டார்.அரசர் அவனைப் பார்த்து, ”தோழா, திருமண ஆடையின்றி எவ்வாறு உள்ளே வந்தாய்?” என்று கேட்டார். அவனோ வாயடைத்து நின்றான்.அப்போது அரசர் தம்பணியாளர்களிடம், ”அவனுடைய காலையும் கையையும் கட்டிப் புறம்பே உள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்” என்றார்.இவ்வாறு அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களோ சிலர்.” என்றார்.

**தியானம்:** ஒவ்வொரு மனிதரும் தமது வாழ்வின் அர்த்தத்தினைத் தெரிந்துணர்ந்து இறைவனது திருவுளத்திற்கேற்ப வாழும்போது பல்வேறு சோதனைகள், வேதனைகள், தடைகள் ஏற்படுவது உண்மை. இதனை இன்றைய நாளில் நினைவுகூரும், புது உலகின் முதல் புனிதை என அழைக்கப்படுகின்ற புனிதை றோசா டீ லீமா (St.Rose of Lima) நிரூபிக்கின்றாள். புனிதை றோசா டீ லீமாவின் வாழ்க்கைக்கும் நற்செய்திக்கும் (மத்தேயு 22:1-14) நிறையத் தொடர்புகள் இருப்பதனை நாம் அவதானிக்கலாம். இப்புனிதை சிறுவயதிலேயே துறவற வாழ்வை மேற்கொள்ள “அழைக்கப்பட்டவளாக” இருந்தாலும், பெற்றோரின் எதிர்ப்பு, குடும்ப வறுமை தடுத்தது. தனது அழகிய தோற்றம் புனித வாழ்விற்கு சவாலானபோது, அரைத்த மிளகு தூளைப்பூசி தன்னையே அவலட்சனமான மாற்றியமைத்தவள். ஆண்டவர் இயேசுவின் முள்முடி போன்று உருவமைக்கப்பட்ட முடியினை அனிந்து மேலும் அவலட்சனமாக மாற்றி, இவ்வுலக இன்பம் குப்பை என நிரூபித்தவள். இவ்வாறானவர்களையே ஆண்டவர் இயேசு “அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்.” (மத்தேயு22:14) எனக்கூறினாரோ எனவும் நாம் இன்றைய நற்செய்தியை வேறுவிதமாகப் பொருள்கொள்ளலாம். மானத்தைக் காப்பதற்கே ஆதியில் மனிதனுக்கு அத்தி மரத்தாலான ஆடை தேவைப்பட்டது. ஆயினும் அவமானத்தையே ஆடையாக உடுத்தும் இக்காலத்தில் புனிதை றோசா டீ லீமா பலருக்கு மாபெரும் சவாலாக அமைந்துள்ளார். நாம் வெறுமனே பெரளவில் கத்தோலிக்கர்களாக வாழ அழைக்கப்படவில்லை. மாறாக, ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை வைத்து, அவருக்காக சிலுவையில் அறையப்பட, இடர்களைச் சந்திப்பதற்குத் தாயாராகவும் இருக்கவேண்டும். அவ்வாறான வாழ்விற்கு துறவற சபைகளில் சேர்ந்து குருக்களாக, கன்னியர்களாக வாழ்வது என்பது முழுப்பொருளல்ல. எனினும், எமது சாதாரன வாழ்க்கையையே ஆண்டவர் இயேசுவுக்கான துறவற வாழ்க்கையாகத் “தெரிந்துகொள்ள” நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அப்படி வாழமுடியும் என்பதனையே இன்றைய நாளுக்கான புனிதை றோசா டீ லீமா வாழ்ந்து காட்டியுள்ளார். எனினும் அவ்வாறான வாழ்விற்கு நாம் தயாரா?